## நடப்பு நிகழ்வுகள்: மார்ச் 16, 2017

**1. எந்த அமைச்சகம், ஏற்றுமதி இணைக்கப்பட்ட உள்கட்டமைப்பை மேம்படுத்த "Trade Infrastructure for Export Scheme (TIES)" ஒன்றை முன்னெடுத்துள்ளது ?**

A. வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம்
B. நிதி அமைச்சகம்
C. கனரக தொழில் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் அமைச்சகம்
D. மின்சார அமைச்சகம்

**விடை: A. வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம்**

மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை இணை அமைச்சர் நிர்மலா சீதாராமன், வெளியில் செல்லும் ஏற்றுமதியை ஊக்குவிக்கும் நோக்கில் மாநிலங்களில் ஏற்றுமதி இணைக்கப்பட்ட உள்கட்டமைப்பை மேம்படுத்த "Trade Infrastructure for Export Scheme (TIES)" எனும் புதிய திட்டத்தை புது தில்லியில் தொடங்கி வைத்தார். TIES-ன் நோக்கம், உள்கட்டமைப்பு இடைவெளிக்கு பாலமாக விளங்கி, வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் அலகுகளின் முன்நோக்கிய மற்றும் பின்தங்கிய தொடர்புகளை வழங்க உள்ளது. திட்டம் ஏப்ரல் 1, 2017 முதல் செயல்படுத்தப்பட உள்ளது மற்றும் ஆண்டுக்கு ரூ.200 கோடி வீதம் 3 ஆண்டுகளுக்கு ரூ 600 கோடி பட்ஜெட் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எல்லை ஹாட்ஸ், மனை சுங்க நிலையங்கள், தரச் சோதனை மற்றும் சான்றிதழ் ஆய்வகங்கள், குளிர் சங்கிலிகள், வர்த்தக மேம்பாட்டு மையங்கள் மற்றும் ஏற்றுமதி கிடங்கு மற்றும் பேக்கேஜிங் போன்ற பெரும் ஏற்றுமதி தொடர்புகளின் உட்கட்டமைப்பு திட்டங்களை அமைக்க மற்றும் தரம் உயர்த்த போதிய உதவியை இந்த திட்டம் அளிக்கும்.

**2. சமீபத்தில் மறைந்த தீபன் சிவகுமார், எந்த மொழியின் குறிப்பிடத்தக்க திரைப்பட இயக்குனர் ?**

A. உருது
B. மலையாளம்
C. ஒடியா

D. தமிழ்

**விடை: B. மலையாளம்**

குறிப்பிடத்தக்க மலையாள திரைப்பட இயக்குனர் தீபன் சிவகுமார்(47), சமீபத்தில் கேரள மாநிலம் கொச்சினில் காலமானார். இவர் பிரித்விராஜ் நடித்த சூப்பர்ஹிட் படமான 'புதிய முகம்' மூலம் நன்கு அறியப்படுகிறார். இவரது மற்ற குறிப்பிடத்தக்க திரைப்படங்களில் Hero, SIM, Dolphin Bar ஆகியவை அடங்கும். இவர் ஜெயராமை வைத்து இயக்கி, அடுத்து வெளிவரவிருக்கும் 'சத்யா' எனும் படம் தற்போது போஸ்ட் புரொடக்ஷன் நிலையில் உள்ளது.

**3. எந்த அமைச்சகம், நீலப்புரட்சியை அடைய "Mission Fingerling" என்ற ஒன்றை முன்னெடுத்துள்ளது ?**

A. உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை அமைச்சகம்
B. நீர்வளம், நதி அபிவிருத்தி மற்றும் கங்கா புத்துணர்வு அமைச்சகம்
C. வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலன் அமைச்சகம்
D. கப்பல் துறை அமைச்சகம்

**விடை: C. வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலன் அமைச்சகம்**

மத்திய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலன் அமைச்சகம், நீலப்புரட்சியை அடைய மொத்தம் ரூ. 52000 லட்சம் செலவில் சமீபத்தில் மிஷன் ஃபிங்கர்லிங் திட்டத்தை தொடங்கியுள்ளது. மீனவர்கள் மற்றும் மீன் விவசாயிகளின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு, மீன்பிடியில் (fisheries) ஒரு ஒருங்கிணைந்த மற்றும் முழுமையான வளர்ச்சி மற்றும் மேலாண்மையை செயல்படுத்தும் சூழலை உருவாக்குவதே இந்த திட்டத்தின் நோக்கமாகும். இந்த திட்டத்தின் இலக்கானது, மீன்பிடி உற்பத்தியை 10.79 mmt (2014-15)-யிலிருந்து 2020-21-க்குள் 15 mmt ஆக உயர்த்துவதே ஆகும்.

**4. எந்த நகரம், Mercer's 2017 வாழ்க்கை தர குறியீட்டில்(Quality of Living index) முதலிடத்தில் உள்ளது ?**

A. ஜெனீவா

B. முனிச்
C. பிராங்பேர்ட்
D. வியன்னா

**விடை: D. வியன்னா**

மெர்சரின் 19-வது வாழ்க்கை தர குறியீட்டு கணக்கெடுப்பு 2017 பட்டியலில் வியன்னா முதலிடத்தில் உள்ளது. சூரிச் இரண்டாவது இடத்திலும், அதனை தொடர்ந்து முனிச், ஆக்லாந்து, வான்கூவர், ட்யூஸெல்டார்ஃப், பிராங்க்பர்ட் மற்றும் ஜெனீவா உள்ளன. ஆசியா மற்றும் லத்தீன் அமெரிக்காவில் உயர்ந்த இடத்தை பிடித்த நகரங்களில் சிங்கப்பூர் (25) மற்றும் மங்கோலியா (79) உள்ளன.இந்திய நகரங்களில் அதிகபட்சமாக மும்பை 141 இடத்திலும், தொடர்ந்து கொல்கத்தா (149) மற்றும் புனே (151) இடத்திலும் உள்ளன. பெங்களூர் (177) குறைந்த இடத்தில் இருப்பதாக அறிக்கை மூலம் மதிப்பிடப்பட்டது. ஒவ்வொரு நகரத்தின் மின்சாரம், நீர், தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் சேவைகள் ஆகியவற்றின் விநியோகம், பொது போக்குவரத்து அத்துடன் போக்குவரத்து நெரிசல் மற்றும் உள்ளூர் விமான நிலையங்களில் இருந்து கிடைக்கும் சர்வதேச விமானங்கள் எண்ணிக்கை ஆகியவற்றை மதிப்பிடும் நகர உள்கட்டமைப்பு தரவரிசையும் இந்த கணக்கெடுப்பில் சேர்க்கப்பட்டுள்ளது. கணக்கெடுப்பின் பகுதியாக தற்போது இருக்கும் இந்திய நகரங்களில் கடந்த ஆண்டு முதல் இதுவரை வாழ்க்கை அளவில் எந்த தர முன்னேற்றமும் இல்லை என்பதை இந்த கணக்கெடுப்பு உயர்த்திக் காட்டுகிறது.

**5. எந்த மாநில அரசு, மலிவான விலையில் உணவை வழங்க "Namma Canteens"-யை தொடங்க இருக்கிறது ?**

A. ஆந்திரப் பிரதேசம்
B. கேரளா
C. தமிழ்நாடு
D. கர்நாடகா

**விடை: D. கர்நாடகா**

கர்நாடகாவின் 2017-18 பட்ஜெட்டின் படி கர்நாடகா அரசு, மாநிலம் முழுவதும் ஒவ்வொரு சாதாரண மனிதனுக்கும் காலை உணவு 5 ரூபாய்க்கும், மதியம் மற்றும் இரவு உணவு முறையே 10 ரூபாய்க்கும் வழங்க “Namma Canteens” எனும் அரசாங்க மானிய உணவு மையங்களை அமைக்க ரூ .100 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. தோராயமாக பெங்களூரில் மட்டும் 200 நம்ம சிற்றுண்டி அமைக்கபடவுள்ளது. இது தவிர, மாநிலத்தில் மதுபானத்தின் மீதான VAT வரியை நீக்கியுள்ளது, அங்கன்வாடி தொழிலாளர்களுக்கு இலவச முட்டையை அறிவித்துள்ளது மற்றும் 5 லட்சம் ஏழை குடும்பங்களுக்கு இலவச எல்பிஜி சேவையை அறிவித்தது.

**6. எந்த நகரின் காவல் நிலையம், Crime and Criminal Tracking Network & Systems (CCTNS) உடன் இணைக்கப்படவுள்ள இந்தியாவின் முதல் காவல் நிலையமாக மாறியுள்ளது ?**

A. கவுகாத்தி
B. உதய்பூர்
C. சிம்லா
D. இந்தூர்

**விடை: C. சிம்லா**

ஹிமாசலப் பிரதேசத்தின் சிம்லா நகரில் உள்ள சஞ்சாவுலி காவல் நிலையம், நாடு தழுவிய ஆன்லைன் கண்காணிப்பு அமைப்பான Crime and Criminal Tracking Network & Systems (CCTNS) உடன் இணைக்கப்படவுள்ள இந்தியாவின் முதல் காவல் நிலையமாக மாறியுள்ளது. முதல்வர் வீரபத்ர சிங், காவல் நிலையத்தை இணைக்கும் CCTNS திட்டத்தை திறந்து வைத்தார். இதற்கிடையில், குலு மாவட்டத்தில் உள்ள மணிகரன், காங்க்ரா மாவட்டத்தில் உள்ள சோலன் நகரம் மற்றும் தாதா சிபா ஆகிய காவல் நிலையங்களும் ஒரே நேரத்தில் CCTNS உடன் இணைக்கப்பட்டன. இந்த அமைப்பின் கீழ், மாநிலம் முழுவதும் 200 க்கும் மேற்பட்ட காவல் நிலையங்கள் இணைக்கப்படும். ஆன்லைன் / ஆ்ஃப்லைன் புகார்கள், குடியிருப்போர் மற்றும் வேலை விண்ணப்பதாரர்களின் போலீஸ் சரிபார்த்தல், நன்னடத்தைச் சான்றிதழ் மற்றும் புலம் பெயர்ந்த கூலியாளி பதிவு முதலியவற்றை மக்கள் சமர்ப்பிப்பதை இந்த வசதி எளிதாக்கும்.

**7. 2017 தேசிய நாடக திருவிழா (National Theatre Festival), எந்த மாநிலத்தில் தொடங்கியது ?**

A. அசாம்
B. கேரளா
C. அருணாசலப் பிரதேசம்
D. சிக்கிம்

**விடை: B. கேரளா**

2017 தேசிய நாடக விழா(NTF), கேரளாவின் திருவனந்தபுரத்தில் உள்ள தாகூர் தியேட்டரில் மார்ச் 16 ஆம் தேதி தொடங்கியது, இது மார்ச் 24 வரை தொடரும். விழாவினை கேரள அரசின் தகவல் மற்றும் மக்கள் தொடர்புத்துறை ஏற்பாடு செய்துள்ளது. திருவிழாவின் 2017 பதிப்பு, இந்திய நாடக துறையில் மிகவும் சிறந்து விளங்கிய மறைந்த கவளம் நாராயண பனிக்கருக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு பதிப்பு, சமகால இந்தியாவின் பிரச்சினைகளான தலித்துகளுக்கு எதிரான கொடுமைகள், பெண்கள் மற்றும் பாலியல் சிறுபான்மையினர் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் போன்றவற்றை பிரதிபலிக்கும். கேரளா உட்பட பல்வேறு மாநிலங்களில் இருந்து மொத்தம் 17 நாடகங்கள் இதில் இடம்பெறும். தொடக்க நாடகமாக, தீபன் சிவராமனின் 'The Legends of Khasak' நாடகம் இருக்கும், இது ஒவி விஜயனின் 'Khasakkinte Ithihasangal' நாவல் தழுவலாகும். திருவிழாவின் ஒரு சிறப்பம்சமாக, மறைந்த ஹெய்ஸ்னாம் கான்ஹைலால் உருவாக்கிய புகழ்பெற்ற மணிப்புரி நாடக குழுவான 'Kalakshetra', மணிப்புரி நாடகமான 'Pebet'-யை கொண்டுவரவுள்ளது.

**8. "So You Want to Know About the Environment" என்ற புத்தகத்தின் ஆசிரியர் யார் ?**

A. பைஜால் வச்சராஜனி
B. ரூபா பாய்
C. ரேச்சல் இக்னோடோப்ஸ்கை
D. சுமணா ராய்

**விடை: A. பைஜால் வச்சராஜனி**

“So You Want to Know About the Environment” என்ற புத்தகத்தை பைஜால் வச்சராஜனி என்பவர் எழுதியுள்ளார். இப்புத்தகம் குழந்தைகளை சுற்றுச்சூழலை ஆய்வு செய்ய, அதில் பயணிக்க, மதிக்க, காதலிக்க வைக்கும். இது காலநிலை மாற்றம், உணவு, கழிவு, நீர் மற்றும் வனவாழ்வு ஆகியவற்றை பார்க்கிறது; அறிவியல் கருத்துக்களை விளக்குகிறது மற்றும் முக்கியமான கேள்விகளை கேட்கிறது. உலகின் பல்வேறு பகுதிகளில் இந்த துறையில் பணியாற்றும் மக்களிடமிருந்து கதைகள், உண்மைகள், ஜோக்குகள், நடவடிக்கைகள் இதில் நிரம்பியுள்ளன.

**9. சர்வதேச பொறியியல் சோர்ஷிங் நிகழ்ச்சியின் (International Engineering Sourcing Show) 6-ம் பதிப்பு, எந்த நகரத்தில் தொடங்கியது ?**

A. சென்னை
B. கொல்கத்தா
C. கொச்சி
D. கவுகாத்தி

**விடை: A. சென்னை**

சர்வதேச பொறியியல் சோர்ஷிங் ஷோவின் (International Engineering Sourcing Show) 6-ம் பதிப்பு, தமிழ்நாட்டில் உள்ள சென்னையில் மார்ச் 16, 2017-ல் தொடங்கியது. சர்வதேச பார்வையாளர்களுக்கான இந்தியாவின் மிகப்பெரிய பொறியியல் சோர்ஸிங் நிகழ்ச்சியான இது, வர்த்தகம் & தொழில்துறை அமைச்சகத்தின் ஆதரவின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. IESS-யின் கவன துறைகளாவன: தொழில்துறை வழங்கல், உலோக மற்றும் கடை மாடி, தொழில்துறை மற்றும் மின் இயந்திரங்கள், ஆட்டோமாட்டிவ் பகுதி முதலியன. 3 நாள் நிகழ்வு, பாபா அணு ஆராய்ச்சி, ஐஐடி மும்பை, ஐஐடி சென்னை, திரவ கட்டுப்பாடு ஆராய்ச்சி நிறுவனம் (FCRI), தூள் உலோகம் மற்றும் புதிய பொருட்களுக்கான சர்வதேச மேம்பாட்டு ஆராய்ச்சி மையம், மத்திய உற்பத்தி தொழில்நுட்ப நிறுவனம் (CMTI) மற்றும் MSME கருவிகள் அறை ஆகிய பிரதிநிதித்துவங்களுடன் கூடிய பிரத்தியேக தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்பு அரங்கமாக உள்ளது.

**10. துப்புரவாளர்களுக்கான தேசிய ஆணையத்தின்(National Commission for Safai Karamcharis) புதிதாக நியமிக்கப்பட்ட தலைவர் யார் ?**

A. மஞ்சு டிலேர்
B. மன்ஹர் வால்ஜி பாய் ஜாலா
C. நரைன் தாஸ்
D. திலிப் கல்லு ஹாதிபேட்

**விடை: B. மன்ஹர் வால்ஜி பாய் ஜாலா**

குஜராத்தின் முன்னாள் பாஜக சட்டமன்ற உறுப்பினர் மன்ஹர் வால்ஜி பாய் ஜாலா, துப்புரவாளர்களுக்கான தேசிய ஆணையத்தின்(National Commission for Safai Karamcharis - NCSK) புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த ஒரு ஆண்டுக்கும் மேலாக இந்த தலைவர் பதவி காலியாக இருந்தது. இது தவிர, உத்தரப் பிரதேசத்தின் மஞ்சு டிலேர் மற்றும் மகாராஷ்டிராவின் திலிப் கல்லு ஹாதிபேட் ஆகியோர் NCSK-ன் மற்ற இரண்டு உறுப்பினர்களாக பொறுப்பேற்றனர். துப்புரவாளர்களுக்கான தேசிய ஆணைய சட்டம் 1993-ன் மூலம் இந்தியாவின் ஒரு சட்டபூர்வ அமைப்பாக NCSK நிறுவப்பட்டது. ஆணைக்குழுவின் நோக்கம், ஒரு தன்னாட்சி அமைப்பாக Safai Karamcharis-க்கான பல்வேறு திட்டங்களை படிப்பது, மதிப்பீடு செய்வது மற்றும் செயல்பாட்டை கண்காணிப்பதாகும் மற்றும் அவர்களின் குறைகளுக்கு நிவர்த்தி வழங்குவதாகும்.